முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதி நிலைப் பரீட்சை – 2015 சனவரி

## (60) உயர் நிதிக் கணக்கீடு
Advanced Financial Accounting

2015-01-18
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 07
வினாக்களின் எண்ணிக்கை : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

(1) ***எல்லா வினாக்களுக்கும்*** *விடை எழுதுக*

(2) *சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும்* ***தருக.*** *உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக்* ***குறிப்பிடுக.***

(3) ***விடைகள் யாவும்*** *உமக்கு வழங்கப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே ஒரு மொழியிலேயே*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *கணிப்பான்கள் பயன்படுத்துதல்* ***அனுமதிக்கப்பட்டுள்ளது.***

(5) *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

**01.** (A) 2014 மார்ச் 31 ஆம் திகதியில் எதென்ஸ் **PLC** யின் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது:

**எதென்ஸ் PLC**
**2014 மார்ச் 31 ஆம் திகதியில் பரீட்சை மீதி**

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (1,000,000 பங்குகள்) | | 12,000 |
| மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்கு மூலதனம் (340,000 பங்குகள்) | | 3,740 |
| 2013 ஏப்ரல் 1 இல் கைக்கொள் இலாபம் | | 1,300 |
| <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்</u> | | |
| காணியும் கட்டடமும் | 20,300 | |
| மோட்டார் வாகனங்கள் | 3,420 | |
| அலுவலக உபகரணம் | 4,290 | |
| <u>2013 ஏப்ரல் 1 இல் தேய்மான ஏற்பாடு</u> | | |
| கட்டடம் | | 2,436 |
| மோட்டார் வாகனங்கள் | | 684 |
| அலுவலக உபகரணம் | | 1,073 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 8,200 | 4,700 |
| 2014 மார்ச் 31 ஆம் திகதியில் தொக்குகள் | 6,150 | |
| மோட்டார் வாகன விற்பனைக் கணக்கு | | 400 |
| வரிமதிப்பாண்டு 2012/13 க்கான வருமான வரிக் கணக்கு | | 1,200 |
| அட்டுறு செலவுகள் | | 612 |
| 13.5% வங்கிக் கடன் | | 2,700 |
| பணிக்கொடை (gratuity) ஏற்பாடு | | 950 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 840 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 55,900 | 86,000 |
| விநியோகச் செலவுகள் | 7,360 | |
| நிர்வாகச் செலவுகள் | 5,850 | |
| ஏனைய செலவுகள் | 475 | |
| நிதிச் செலவுகள் | 890 | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 3,200 | |
| <u>செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம்</u>: | | |
| சாதாரண பங்குகள் | 750 | |
| மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் | 170 | |
| | **117,795** | **117,795** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2014 மார்ச் 1 ஆம் திகதி சகல சாதாரண பங்குதாரர்களுக்கும் வைத்திருக்கும் ஒவ்வொரு 10 பங்குகளுக்கும் 3 பங்குகள் என்ற விகிதத்தில் உரிமைப் பங்குகள் (rights issue) பங்கொன்று ரூ. 9/- விலையில் வழங்கப்பட்டது. எல்லாப் பங்குதாரர்களும் தமது உரிமையைப் பிரயோகித்தனர். பெறப்பட்ட பணம் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பில் இந்தப் பதிவுகளைத் தவிர வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) கம்பனியின் தொக்குகளின் இடப்பெயர்வுக்காக உபயோகிக்கப்பட்டு வந்த லொறி 2014 மார்ச் 18 ஆம் திகதி விபத்துக்கு உள்ளானதுடன் இது தொடர்பில் காப்புறுதி இழப்பீடு ரூ.50,000/-, 2014 மார்ச் 31 ஆம் திகதி பெறப்பட்டது. கம்பனி இந்த வாகனத்திளை 2014 மார்ச் 31 ஆம் திகதி ரூ. 350,000/- க்கு விற்பனை செய்தது. இந்த வாகனம் 2011 ஏப்ரல் 1 ஆம் திகதி ரூ. 855,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டது. விற்பனைப் பெறுவனவு மற்றும் காப்புறுதிப் பெறுவனவு ஆகிய இரண்டும் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு, மோட்டார் வாகன விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டன. இவை தவிர வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(3) 2013 யூலை 31 ஆம் திகதி கம்பனி புதிய போட்டோ பிரதி இயந்திரமொன்றினை ரூ.1,200,000/- க்கு கொள்வனவு செய்தது.

(4) 2013 ஏப்ரல் 1 ஆம் திகதி கம்பனி காணியினை மீள்மதிப்பீடு செய்ததன் விளைவாக காணிப் பெறுமதி ரூ. 15 மில்லியனிலிருந்து ரூ. 18 மில்லியனாக அதிகரித்தது. இந்த மீள்மதிப்பீடு தொடர்பாக எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) தேய்மானம், கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகையில் நேர்கோட்டு முறையில் கணிக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரண மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடம் | - | 20 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | - | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணம் | - | 8 வருடங்கள் |

(6) 2013/14 ஆண்டின்போது வாடிக்கையாளர் ஒருவர் கம்பனிக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். 2014 மே 20 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின்படி கம்பனி வாடிக்கையாளருக்கு நட்டஈடாக ரூ. 120,000/- செலுத்த வேண்டும்.

(7) 2014 மார்ச் 31 ஆம் திகதியில் பணிக்கொடை ஏற்பாடு ரூ. 962,000/-.

(8) வரி மதிப்பாண்டு 2013/14 க்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 3,100,000/- ஆகும்.

(9) வங்கிக் கடனின் $\frac{1}{3}$ பங்கு அடுத்த ஆண்டில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும். அந்த ஆண்டிற்கான வட்டி கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(10) ஆண்டின் இறுதியில் ரூ. 10,000/- பெறுமதியுடைய வியாபார வருமதிகள் அறவிட முடியாததாக இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேவையான பதிவுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

(11) 2014 மே 31 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன:

- 2014 மார்ச் 31 ஆம் திகதியில் இருந்த சாதாரண பங்குகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.1/- வீதம் இறுதிப் பங்கிலாபம் செலுத்துவதற்கு.
- 2014 மார்ச் 31 ஆம் திகதியில் இருந்த மீட்கத்தகு முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 0.60 வீதம் பங்கிலாபம் செலுத்துவதற்கு.

(12) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக 2014 யூன் 25 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், பிரசுரிப்புத் தேவைகளுக்காக **எதென்ஸ் PLC** க்கு **கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக.**

(a) 2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (10 புள்ளிகள்)

(b) 2014 மார்ச் 31 ஆம் திகதி நிதிநிலைக் கூற்று. (07 புள்ளிகள்)

(c) 2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (05 புள்ளிகள்)

(d) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான குறிப்பு. (05 புள்ளிகள்)

(B) LKAS-08 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்திற்கு அமைவாக கீழ்வருவனவற்றைச் சுருக்கமாக விபரிக்குக:

(a) முன்னைய கால வழுக்கள் (Prior period errors)

(b) கணக்கீட்டுக் கொள்கைகள் (Accounting policies) (03 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

**02.** **லலித், மானெல், நெல்சன்** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 4:3:3 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடமை வியாபாரம் ஒன்றினை நடாத்தி வருகின்றனர். 2014 மார்ச் 31 ஆம் திகதி பங்குடமையின் நிதிநிலைக் கூற்று வருமாறு:

**2014 மார்ச் 31 ஆம் திகதி நிதிநிலைக் கூற்று**

| | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (முன்கொணரற் பெறுமதியில்) | | |
| தளபாடமும் இணைப்புகளும் | 4,400 | |
| அலுவலக உபகரணம் | 5,200 | |
| மோட்டார் வாகனங்கள் | 6,000 | 15,600 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தொக்குகள் - கிரயத்தில் | 4,400 | |
| வியாபார வருமதிகள் | 3,800 | |
| வங்கி மீதி | 3,250 | 11,450 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **27,050** |
| **உரிமையாண்மைகளும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை** | | |
| பங்காளர் கணக்குகள் - **லலித்** | 9,200 | |
| - **மானெல்** | 6,600 | |
| - **நெல்சன்** | 5,800 | 21,600 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 4,200 | |
| ஏனைய சென்மதிகள் | 1,250 | 5,450 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **27,050** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன:

(1) 2014 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து பங்குடமையை பரிப்பு வரையறுக்கப்பட்ட **LMN** கம்பனியாக மாற்றுவதற்கு பங்காளர்கள் தீர்மானித்தனர்.

(2) கொள்வனவுப் பதிலிறுக்கியான ரூ. 20/- மில்லியனை ஒவ்வொன்றும் ரூ. 10/- விலையில் 2 மில்லியன் சாதாரண பங்குகளை பங்காளர்களுக்கு இடையில் அவர்களின் இலாப, நட்டப் பகிர்வு விகிதத்தில் ஒதுக்குவதன் மூலம் தீர்க்கப்பட்டது.

(3) கீழ்வரும் சொத்துக்களை காட்டப்பட்ட மதிப்பீடுகளில் கம்பனிக்கு மாற்றுவதற்கு பங்காளர்கள் இணங்கினர்:

| | | |
|---|---|---|
| தளபாடமும் இணைப்புகளும் | - | ரூ. 4 மில்லியன் |
| அலுவலக உபகரணம் | - | ரூ. 4.8 மில்லியன் |
| தொக்குகள் | - | ரூ. 4 மில்லியன் |

(4) ரூ. 3.4 மில்லியன் முன்கொணரற் பெறுமதியுடைய மோட்டார் வாகனமொன்றை ரூ.3 மில்லியன் மதிப்பீட்டில் லலித் எடுத்துக் கொண்டார். எஞ்சிய வாகனங்கள் அவற்றின் ஏட்டுப் பெறுமதிகளில் கம்பனிக்கு மாற்றப்பட்டன.

(5) ரூ. 80,000/- வியாபார வருமதி மீதி அறவிட முடியாததாக பதிவழிக்கப்பட வேண்டியுள்ளது. ரூ. 120,000/- பெறுமதியான வியாபார வருமதிகள் மீதியினை அறவிடுவதற்கு **நெல்சன்** இணங்கினார். எஞ்சிய வியாபார வருமதிகள் அவற்றின் ஏட்டுப் பெறுமதிகளில் கம்பனிக்கு மாற்றப்பட்டன.

(6) சகல பரிப்புக்களும் பங்குடமையினால் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

(7) பங்காளரின் கணக்குகளில் பற்றாக்குறை ஏற்படுமிடத்து அதற்குப் பணம் செலுத்த பங்காளர்கள் இணங்கினர்.

(8) பங்குடமைக் கலைப்புச் செலவு ரூ. 320,000/-.

மேற்படி தகவல்களின் அடிப்படையில் **கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக**.

(a) தேறுகைக் கணக்கு (Realization account)

(b) பங்குடமையின் காசேடு

(c) பங்காளர்களின் கணக்குகள்

(d) 2014 ஏப்ரல் 1 ஆம் திகதியில் **வரையறுக்கப்பட்ட LMN (தனி)** கம்பனியின் நிதிநிலைக் கூற்று. (15 புள்ளிகள்)

**03.** 2013 ஏப்ரல் 01 ஆம் திகதி **ஹரின் PLC, சமன் PLC** யின் 1 மில்லியன் சாதாரண பங்குகளின் 75% இனை ரூ. 15.5 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. அந்தத் திகதியில் **சமன் PLC** யின் இனங்காணற்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்குச் சமமாகும்.

கொள்வனவுத் திகதியில் **சமன் PLC** யின் கைக்கொள் இலாப மீதி ரூ. 7.2 மில்லியனாகவும் அதன் பங்குகளின் சந்தைப் பெறுமதி பங்கொன்று ரூ. 14/- ஆகவும் இருந்தன. கட்டுப்பாடற்றோர் பாத்தியதையை அளவிடுதலில் **ஹரின் PLC** சீர்மதிப்பு அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது.

2014 மார்ச் 31 ஆம் திகதி இந்த இரு கம்பனிகளினதும் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**2014 மார்ச 31 ஆம் திகதி நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | **ஹரின் PLC** | **சமன் PLC** |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (முன்கொணரற் பெறுமதியில்) | 18,200 | 15,440 |
| **சமன் PLC** யில் முதலீடு | 15,500 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 4,440 | 3,240 |
| வியாபார வருமதிகள் | 3,280 | 2,820 |
| ஏனைய வருமதிகள் | 810 | 520 |
| **சமன் PLC** யுடன் நடைமுறைக் கணக்குகள் | 380 | - |
| காசும் காசுச் சமானங்களும் | 1,290 | 1,080 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **43,900** | **23,100** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 25,000 | 10,000 |
| கைக்கொள் இலாபம் | 12,410 | 8,400 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 2,500 | 1,200 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வியாபார சென்மதிகள் | 2,870 | 2,100 |
| ஏனைய சென்மதிகள் | 1,120 | 1,240 |
| **ஹரின் PLC** யுடன் நடைமுறைக் கணக்கு | - | 160 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **43,900** | **23,100** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) **ஹரின் PLC** பொருட்களை **சமன் PLC** க்கு கிரயத்தில் 25% இலாபம் குறித்து விற்பனை செய்கின்றது. **ஹரின் PLC**யினால் ரூ.150,000/- க்கு விலைப் பட்டியலிடப்பட்ட பொருட்கள் **சமன் PLC** யினால் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையில் பெறப்பட்டிருக்கவில்லை.

(2) **சமன் PLC** யினால் **ஹரின் PLC** க்கு அனுப்பப்பட்ட ரூ. 70,000/- க்கான காசோலை **ஹரின் PLC** யினால் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையில் பெறப்பட்டிருக்கவில்லை.

(3) 2014 மார்ச் 31 ஆம் திகதியில் **சமன் PLC** யின் தொக்குகள் **ஹரின் PLC** யிடமிருந்து பெற்ற ரூ. 600,000/- பெறுமதியான தொக்குகளை உள்ளடக்கியிருந்தது.

(4) **சமன் PLC** யின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் கீழ்வருமாறு அமைந்தது:

| | | |
|---|---|---|
| 2013 சனவரி 1 ஆம் திகதி காணி மீள்மதிப்பீடு | - | ரூ. 500,000/- |
| 2014 சனவரி 1 ஆம் திகதி காணி மீள்மதிப்பீடு | - | ரூ. 700,000/- |
| | | ரூ. 1,200,000/- |

மேற்படி தகவல்களை உபயோகித்து **நீர் செய்ய வேண்டியது,**

(a) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பினைக் கணிக்குக.

(b) 2014 மார்ச் 31 ஆம் திகதியில் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

**04.** (A) ஒன்றித்த நிதியம் (Consolidated Fund) கொண்டுள்ள பணத்திற்கு **மூன்று** (03) உதாரணங்களை நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

(B) பொதுத் தாளாண்மைகள் குழுவின் (COPE) **இரண்டு** (02) வகிபாகங்களையும் **இரண்டு** (02) அதிகாரங்களையும் கூறுக. (04 புள்ளிகள்)

(C) உறுமுரிமை நிதியத்தின் (Contingencies Fund) நோக்கங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** 2014 மார்ச் 31 மற்றும் 2013 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **சீரெல்கோ PLC** யின் நிதிநிலைக் கூற்றுக்களும் 2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அதன் ஏனைய நிதித் தகவல்களும் கீழே தரப்பட்டுள்ளன:

**சீரெல்கோ PLC**

**நிதிநிலைக் கூற்றுக்கள்**

*(ரூ.'000)*

| | **2014 மார்ச் 31 இல்** | | **2013 மார்ச் 31 இல்** | |
|---|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>**<br>**<u>நடைமுறையல்லாச் சொத்துக்கள்</u>** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (முன்கொணரற் பெறுமதியில்) | | 13,420 | | 10,230 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| தொக்குகள் | 5,240 | | 4,320 | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 3,400 | | 3,840 | |
| குறுங்கால முதலீடுகள் | - | | 500 | |
| காசும் காசுச் சமானங்களும் | 1,840 | 10,480 | 1,260 | 9,920 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **23,900** | | **20,150** |
| **<u>உரிமையாண்மையும் பரிப்புக்களும்</u>** | | | | |
| **உரிமையாண்மை** | | | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 11,500 | | 10,000 | |
| கைக்கொள் இலாபம் | 8,250 | | 6,630 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 1,500 | 21,250 | - | 16,630 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | | | |
| வங்கிக் கடன் - நடைமுறையல்லாப் பகுதி | | - | | 160 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | | |
| வியாபாரச் சென்மதிகள் | 2,400 | | 3,010 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 90 | | 110 | |
| வங்கிக் கடன் - நடைமுறைப் பகுதி | 160 | 2,650 | 240 | 3,360 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **23,900** | | **20,150** |

**2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஏனைய நிதித் தகவல்கள்**

| | **ரூ.'000** |
|---|---|
| ஆண்டின்போது தாக்கல் செய்யப்பட்ட தேய்மானம் | 1,240 |
| உபகரண விற்பனை மீதான இலாபம் | 320 |
| ஆண்டிற்கான வரிக்கு முந்திய நிகர இலாபம் | 2,830 |
| ஆண்டிற்கான வருமான வரி | 410 |
| வட்டி வருமானம் | 60 |
| வட்டிச் செலவு | 25 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 1,500 |
| ஆண்டின்போது செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 800 |
| விற்கப்பட்ட உபகரண முன் கொணரற் தொகை | 910 |

2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக <u>நேரில் முறையை</u> உபயோகித்து **சீரெல்கோ PLC** யின் காசுப் பாய்வுக் கூற்றினைத் தயாரிக்குக. (15 புள்ளிகள்)

**06.** **வரையறுக்கப்பட்ட றேஞ்சர்ஸ் கம்பனி** நுகர்வோர் பொருட்களின் விநியோக வியாபாரத்தினை நடாத்தி வருகிறது. கம்பனியின் தலைமையகம் கண்டியிலும் கிளை அநுராதபுரத்திலும் அமைந்துள்ளன. 2014 மார்ச் 31 ஆம் திகதி தலைமையகம் மற்றும் கிளையின் பரீட்சை மீதிகள் கீழ்வருமாறு:

**2014 மார்ச் 31 ஆம் திகதி பரீட்சை மீதிகள்**

*(ரூ.'000)*

| | **தலைமையகம்** | | **கிளை** | |
|---|---|---|---|---|
| | **வரவு** | **செலவு** | **வரவு** | **செலவு** |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | | 8,250 | | |
| கைக்கொள் இலாபம் - 2013 ஏப்ரல் 1 இல் | | 700 | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 5,350 | | 1,360 | |
| தேய்மான ஏற்பாடு – 2013 ஏப்ரல் 1 இல் | | 2,745 | | 770 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 8,935 | 5,340 | 540 | - |
| நடைமுறைக் கணக்குகள் | 890 | | | 720 |
| 2013 ஏப்ரல் 1 ஆம் திகதி தொக்குகள் - கிரயத்தில் / பட்டியல் பெறுமதியில் | 2,300 | | 800 | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 3,375 | | |
| தலைமையகத்திலிருந்து பெற்ற பொருட்கள் | | | 3,250 | |
| ஏனைய சென்மதிகள் | | 165 | | |
| தொக்கு மீதான தேறாத இலாப ஏற்பாடு | | 160 | | |
| காசுக் கையிருப்பு | 481 | | 25 | |
| வங்கி மீதி | 1,450 | | | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 17,250 | 29,500 | | 8,315 |
| விநியோகச் செலவுகள் | 6,650 | | 2,410 | |
| நிர்வாகச் செலவுகள் | 5,523 | | 1,175 | |
| ஏனைய செலவுகள் | 1,151 | | 245 | |
| நிதிச் செலவுகள் | 255 | | | |
| | **50,235** | **50,235** | **9,805** | **9,805** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) தலைமையகம் கிளைக்கு பொருட்களை கிரயத்தில் 25% இலாபம் வைத்து அனுப்புகிறது.

(2) 2014 மார்ச் 31 ஆம் திகதி தொக்குகள்:

தலைமையகத்தில் - கிரயத்தில் - ரூ. 2,150,000/-

கிளையில் - பட்டியலிடு பெறுமதியில் - ரூ. 680,000/-.

(3) தலைமையகம் மற்றும் கிளையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது ஆண்டிற்கான தேய்மானம் முறையே ரூ. 800,000/- மற்றும் ரூ. 200,000/- ஆகும்.

(4) தலைமையகம் மற்றும் கிளையில் ஐயுறவுக் கடன் ஏற்பாட்டிற்காக முறையே ரூ. 55,000/- மற்றும் ரூ. 7,000/- ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(5) கிளையினால் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்ட ரூ. 45,000/- இன்னும் தலைமையகத்தில் பெறப்படவில்லை. நடைமுறைக் கணக்குகளுக்கு இடையிலான வித்தியாசம் செல்வழிப் பொருட்கள் மற்றும் செல்வழிப் பணத்தின் காரணமாக ஏற்பட்டதாகும்.

(6) வரி மதிப்பாண்டு 2013/14 க்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 650,000/-. கம்பனி ஆண்டின் போது வரிக் கொடுப்பனவு எதனையும் மேற்கொள்ளவில்லை.

மேற்படி தகவல்களை உபயோகித்து 2014 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தலைமையகம், கிளை மற்றும் முழுக் கம்பனியின் முற்றடக்க வருமானக் கூற்றினை நிரல் வடிவில் தயாரிக்குக. (15 புள்ளிகள்)

– o0o –